# Extrait du Journal de PONDICHERY

**A l’occasion des journées indiennes de l’EFACS (Ecole de Formation des Avocats Centre Sud), des avocats de Montpellier s’entretenant avec des confrères de Pondichery (Février 2010)**

## பிரான்ஸ் வக்கீல்கள் புதுச்சேரியில் கலந்தாய்வு

புதுச்சேரி, பிப்.17–

பிரான்ஸ் நாட்டில் இருந்து வந்த 25 பேர் கொண்ட வக்கீல்கள் குழுவினர், புதுச்சேரி கோர்ட்டில் வக்கீல்களுடன் கலந்துரையாடினர்.

சென்னை ஐகோர்ட் நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற தாவிது அன்னுசாமியின் மகள் ஜெயதேவி, பிரான்ஸ் நாட்டில் வக்கீலாக பணியாற்றி வருகிறார்.

வக்கீல் ஜெயதேவி தலைமையில், பிரான்ஸ் நாட்டை சேர்ந்த வக்கீல்கள் 25 பேர், புதுச்சேரி நீதிமன்ற அலுவல்முறைகள் பற்றி தெரிந்து கொள்ளவும், வக்கீல்களுடன் கலந்துரையாடல் செய்யவும் ஒரு வார பயணமாக புதுச்சேரி வந்தனர். நேற்று முன்தினம் மாலை புதுச்சேரி கோர்ட்டுக்கு வந்த பிரான்ஸ் வக்கீல்கள் குழு வினரை வக்கீல்கள் மோகன்கீர்த்திக்குமார், ரமேஷ், மரிஅன்ன தயாவதி ஆகியோர் வரவேற் றனர்.

பின், புதுச்சேரி நீதிமன்றத்தின் அலுவல் முறைகள் குறித்து கேட்டறிந்து, புதுச்சேரி வக்கீல் களுடன் கலந்துரையாடினர்.



பிரான்ஸ் நாட்டில் இருந்து வந்த 25 பேர் கொண்ட வக்கீல்கள் குழுவினர், புதுச்சேரி கோர்ட்டில் வக்கீல்களுடன் கலந்துரையாடினர்.